# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆவணி 10 | திங்கட்கிழமை | 26.08.2024 | கதிர் 343







# அனைத்து மக்களுக்கும் சார்பான அரசியலமைப்பு உருவாக்கப்படும்

## அநுர குமாரவின் விஞ்ஞாபனத்தின் உறுதி

"வளமான நாடு – அழகான வாழ்க்கை" எனும் தொனிப்பொருளில் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனம் கட்சியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான அநுரகுமார திசாநாயக்காவினால் இன்று கொழும்பில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தேர்தல் விஞ்ஞாபனத்தை மத தலைவர்களுக்கு வழங்கினார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமைக்கு பதிலாக மாற்று முறைமையை செயற்படுத்தும் திட்டங்கள் ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

2➤



# 24 மாதங்களில் வறுமையை ஒழிப்பதற்கு வேலைத்திட்டம்

## கந்தளாயில் வைத்து சஜித் அறிவிப்பு



உணவுத் தேவை, உணவு தேவை அல்லாத வேறு தேவைகள், சேமிப்பு, நுகர்வு, முதலீடு, உற்பத்தி மற்றும் ஏற்றுமதி போன்ற விடயங்களை கருத்தில் கொண்டும், வறுமை ஒழிப்பு திட்டத்தின் ஊடாக மாதாந்தம் 20 ஆயிரம் ஷ்ரூபா வழங்கி, 24 மாதங்களில் வறுமையை ஒழிக்கும் தேசிய வேலைத்திட்டத்தை முன்னெடுக்கப்போவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

கந்தளாய், சேருவில நகரில் இன்று பகல் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

'வாழ்க்கைக்கான வழிகள் இன்றி தெளிவான வருமான வரிகள் இன்றி, ஒவ்வொரு நாளுக்கும் மூன்று வேளை உணவையும் பெற்றுக் கொள்ள முடியாத வறிய மக்களுக்காக ஜனசவிய, சமூர்த்தி, அஸ்வெசும, மற்றும் கெமிதிரிய ஆகிய வேலை திட்டங்களில் உள்ள சிறந்த விடயங்களை ஒன்றாக சேர்த்து, அவற்றின் குறைபாடுகளை நீக்கி, சிறந்த வேலை திட்டமொன்றை முன்னெடுப்போம். 2➤

# ஹெலிகொப்டர்களை பாவிக்க வேட்பாளர்களுக்கு கட்டுப்பாடு

## தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

ஜனாதிபதித் தேர்தல் கூட்டங்கள் மற்றும் பிரசார நடவடிக்கைகளுக்காக பல்வேறு பகுதிகளுக்கு செல்ல அரசு செலவில் விமானப்படை ஹெலிகொப்டர்கள் அல்லது விமானங்களை பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு அனைத்து வேட்பாளர்களுக்கும் அறிவித்துள்ளது.

அரசாங்க விமானங்கள் தேர்தல் நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டால் அதற்கு பணம் செலுத்த வேண்டும் என தேர்தல் ஆணைக்குழு தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார். மேலும், தேர்தல் அல் லாத பிற கடமைகளுக்கு விமானங்களை பெற்றுக்கொள்ளக்கூடியவர்கள் அரசாங்க விமானங்களை அவ் வாறான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதற்கு எவ்வித தடை யும் இல்லை எனவும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

# சுவிஸில் இருந்து வந்தவர் வவுனியாவில் படுகொலை

சுவிஸ் நாட்டில் இருந்து வருகை தந்த குடும்பஸ்தர் ஒருவர் வவுனியா வடக்கு, சின்னடம்பன் பகுதியில் உள்ள வீட்டில் கொலை செய்யப்பட்ட நிலையில் இன்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று கனகராயன்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா வடக்கு, சின்னடம்பன் பகுதியில் உள்ள உறவினர் வீடொன்றில் சுவிஸ் நாட்டில் இருந்து விடுமுறையில் வருகை தந்த ஒருவர் தங்கியிருந்துள்ளார்.

அந்த வீட்டில் சுவிஸ் நாட்டில் இருந்து வருகை தந்த நபரும், அவரது உறவினரும் இரவு மது விருந்தில் ஈடுபட்ட நிலையில் இருவருக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டு அது கைகலப்பாக மாறியுள்ளது.

இதன்போது சுவிஸ் நாட்டில் இருந்து வருகை தந்தவரின் தலையில் இரும்புக் கம்பியால் தாக்கியதில் அவர் அந்த இடத்திலேயே



மரணமடைந்துள்ளார். செல்லத்துரை விமலநாதன் (வயது 66) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இது தொடர்பில் கிடைத்த முறைப்பாட்டுக்கமைய சம்பவ இடத்துக்குச்சென்ற கனகராயக்குளம் பொலிஸார் சம்பவம் தொடர்பில் 60 வயது குடும்பஸ்தர் ஒருவரைக் கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# ஜனாதிபதித் தேர்தலினால் பட்டாசுக்கு அதிக கிராக்கி

*ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு பட்டாசுகளுக்கு அதிக தேவை இருப்பதாக அகில இலங்கை பட்டாசு உற்பத்தியாளர்கள் சங்கம் இன்று கூறியுள்ளது.*

*பட்டாசு விற்பனை கணிசமான அளவில் அதிகரித்துள்ளதாகவும் சங்கத்தின் தலைவர் தினேஷ் பெர்னாண்டோ தெரிவித்தார்.*

*தேர்தல் பேரணிகள் மற்றும் நிகழ்வுகளுக்குப் பயன்படுத்தப்படும் பெரிய அளவிலான பட்டாசுகள் உற்பத்தி செய்வதற்கான அதிக தேவை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.*

# சமுர்த்தி உத்தியோகத்தர் வாகன விபத்தில் மரணம்



யாழ்ப்பாணத்தில் இன்று காலை இடம்பெற்ற வாகன விபத்தில் சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

காரைநகரைச் சேர்ந்த ப.ஜங்கரன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

தனது மகனைத் தனியார் வகுப்பில் இருந்து மோட்டார் சைக்கிளில் அழைத்து வந்த வேளை, பிறவுண் வீதியில் ஓட்டோ மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்தார்.

அவரை அங்கிருந்தவர்கள் மீட்டு சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்த்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

## 24....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உணவுத் தேவை, உணவு தேவை அல்லாத வேறு தேவைகள், சேமிப்பு, நுகர்வு, முதலீடு, உற்பத்தி மற்றும் ஏற்றுமதி போன்ற விடயங்களை கருத்தில் கொண்டும், வறுமை ஒழிப்பு திட்டத்தின் ஊடாக மாதாந்தம் 20 ஆயிரம் ஷரூபா வழங்கி, 24 மாதங்களில் வறுமையை ஒழிக்கும் தேசிய வேலைத்திட்டத்தை முன்னெடுப்போம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இந்த 20,000 ஷரூபா நிவாரணம் வழங்கப்படுகின்ற போது 24 மாதங்களில் வறுமையை ஒழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். வீட்டில் உள்ள பெண்களுக்கு இந்த சலுகைகளை பெற்றுக்கொடுத்து, வீடுகளிலேயே அனைத்து விடயங்களையும் நேர்த்தியாகவும், வளமாகவும் முன்னெடுப்பதால் அவர்களை மையமாகக் கொண்டே இந்த வேலை திட்டம் முன்னெடுக்கப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

## அனைத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அனைத்து மக்களுக்கும் சார்பான வகையில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும் என்றும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

O நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியம் நீக்கப்படும.

O இலவச வாகன அனுமதி பத்திரம் இரத்து செய்யப்படும்.

O நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபை அமர்வில் பங்கேற்பதற்காக வழங்கப்படும் கொடுப்பனவு நிறுத்தப்படும.

O ஜனாதிபதிக்குரிய உத்தியோகபூர்வ இல்லங்களின் எண்ணிக்கை ஒன்றுக்கு மட்டுப்படுத்தப்படும்.

O முன்னாள் ஜனாதிபதிகளுக்கும், அவர்களின் வாழ்க்கைத்துணைகளுக்கும் வழங்கப்பட்டுள்ள ஓய்வூதியம், விசேட கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகள் இல்லாதொழிக்கப்படும்.

O அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சர்களின் எண்ணிக்கை 25. பிரதி அமைச்சர்கள் எண்ணிக்கை 25. இராஜாங்க அமைச்சு பதவிகள் நீக்கப்படும.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்தல், புதிய நாடாளுமன்ற தேர்தல் முறைமை என்பன உள்ளிட்ட விடயங்கள் புதிய அரசமைப்பு ஊடாக இடம்பெறும். சர்வஜன வாக்கெடுப்புடன் புதிய அரசமைப்பை இயற்றுவதற்குரிய உறுதிமொழியும் வழங்கப்பட்டுள்ளது.

# கொழும்பை வந்தடைந்தது இந்தியாவின் போர்க்கப்பல்

இந்திய கடற்படையின் முன்னரங்க போர்க்கப்பலான ஐ.என்.எஸ். மும்பை மூன்று நாள் விஜயமாக இன்று 26 ஆம் திகதி காலை கொழும்புதுறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

இக்கப்பலுக்கு இலங்கை கடற்படையினரால் சம்பிரதாயபூர்வமான வரவேற்பு வழங்கப்பட்டது. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட டெல்லி ரகத்தைச் சேர்ந்த நாசகாரி கப்பல்களில் மூன்றாவது கப்பல் ஐஎன்எஸ் மும்பை ஆகும்.

மஸ்கன் டொக் லிமிடெட் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட இக்கப்பலுக்கு மும்பை நகரின் பெயரை அடிப்படையாகக் கொண்டு பெயர் சூட்டப்பட்டது.

இக்கப்பல் அதன் தரமுயர்த்தல் பணிகளின் பின்னர் 2023ஆம் ஆண்டு டிசம்பர் 8ஆம் திகதி விசாகபட்டினத்தில் உள்ள கிழக்கு பிராந்திய கடற்படை கட்டளை பிரிவிடம் சேவையில் இணைக்கப்பட்டது.

கொழும்பில் ஐஎன்எஸ் மும்பை தரித்து நிற்கும் காலத்தில் இருகடற்படையினரதும் சிறந்த நடைமுறைகளை பகிர்ந்து கொள்ளும் இலக்குடன் இலங்கை கடற்படை அதிகாரிகள் இக்கப்பலுக்கு விஜயம் செய்து அனுபவப் பகிர்வு செயற்பாடுகளில் ஈடுபட உள்ளனர்.

இந் நிலையில் இக்கப்பலின் விஜயத்தின்போது மேற்கு கடற்படை பிராந்திய தளபதி ரியர் அட்மிரல் டபிள்யூ.டி.சி.யு.குமாரசிங்க இக்கப்பலின் கட்டளை அதிகாரி மேற்கு கடற்படை பிராந்திய தலைமையகத்தில் சந்திக்கவுள்ளார்.

அத்துடன் விளையாட்டுகள், யோகா மற்றும் கரையோரம் சுத்தமாக்கும் பணிகள் போன்ற கூட்டு செயற்பாடுகள் இலங்கை கடற்படையினருடன் இணைந்து குறித்த கப்பல் விஜயத்தின் போது மேற்கொள்ளப்பட உள்ளது.

# சுகாதார தகவல் மையம் ஆரம்பம்

களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் நோயாளர் பாதுகாப்பு சுகாதார தகவல் மையம் வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் கே.புவனேந்திரநாதன் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆர்முரளிஸ்வரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு தகவல் மையத்தை திறந்துவைத்தார்.

# மருதானையில் ஒருவர் தாக்கப்பட்டு கொலை

தனிப்பட்ட தகராறு காரணமாக ஒருவர் தாக்கப்பட்டதில் உயிரிழந்துள்ளார். மருதானை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தேவநம்பியதிஸ்ஸ மாவத்தை பகுதியில் நேற்று இரவு இக்கொலை இடம்பெற்றுள்ளது.

இருவருக்கு இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குற்றச் சம்பவத்துடன் தொடர்புடைய 19 வயதுடைய இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சந்தேக நபர் வெலிமடை பகுதியைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'நீதிக்கான பயணம்' என்ற பெயரில் கிளிநொச்சியில் சித்திர கண்காட்சி

நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் இளைஞர் யுவதிகளின் கைவண்ணத்தில் உருவான சித்திரங்களின் கண்காட்சி கிளிநொச்சி டிப்போ சந்தியில் இன்று நடைபெற்றது.

இதில் வடமாகாணத்தைச்சேர்ந்த ஐந்து மாவட்டங்களின் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சித்திரங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. மூவின இளைஞர் யுவதிகளும் பங்குபற்றிருந்தனர். (113)

# யாழில் மனைவிக்கு தீ வைத்த கணவன்

குடும்பப் பிரச்சினையால் மனைவியை அறைக்குள் வைத்து பூட்டி கணவன் தீ மூட்டியதில் மனைவி தீக்காயங்களுக்குள்ளான நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அச்சுவேலி பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், அந்தப் பகுதியைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் நிருத்திகா (வயது 28) எனும் குடும்பப் பெண்ணே படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கணவன் - மனைவிக்கிடையில் நீண்ட காலமாகப் பிரச்சினைகள் நிலவி வந்தன. நேற்றும் இருவருக்கும் இடையில் பிரச்சினைகள் ஏற்பட்ட நிலையில், கணவன், மனைவியை வீட்டின் அறைக்குள் இழுத்துச் சென்று தாக்கிய பின்னர், மனைவிக்குத் தீ வைத்து விட்டு அறைக் கதவைப் பூட்டி விட்டு தப்பிச் சென்றிருந்தார்.

அயலவர்கள் அந்தப் பெண்ணைக் காப்பாற்றி அச்சுவேலி வைத்தியசாலையில் சேர்த்திருந்தார்கள். அந்தப் பெண் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# 13,134 வாக்குச் சாவடிகள் அமைப்பு 45 நிலையங்களில் எண்ணப்படும்!




ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் 25 நாட்கள் அவகாசம் உள்ள நிலையில், வாக்குச் சீட்டுகளை அச்சிடும் பணிகள் நடைபெற்று வருவதாகவும், தேர்தல்கள் ஆணைக்குழு மற்றைய ஆயத்தப் பணிகளில் ஈடுபட்டு வருவதாகவும் தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்க அச்சகத் திணைக்களத்தில் வாக்குச் சீட்டுகள் அச்சிடும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில், அந்தச் செயற்பாடுகள் அட்டவணையின்படி நடைபெறுவதை உறுதிசெய்யநடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

கட்டுப்பணம் மற்றும் வேட்பு மனு தாக்கல் ஆகியவை திட்டமிட்டபடி நடைபெற்றதைச் சுட்டிக்காட்டிய அவர், 13,134 வாக்குச் சாவடிகள் மற்றும் 45 வாக்கு எண்ணும் மையங்களாகப் பயன்படுத்தப்படும் வளாகங்களை ஆணையம் இப்போது கண்காணித்துவருகிறது என்றும் தெரிவித்தார். தேர்தல் பணிக்கு பயன்படுத்தப்படும் வாகனங்களையும் சோதனை செய்து வருதாகவும் அவர் தெரிவித்தார்.

தபால் வாக்குகளுக்கான வாக்குச் சீட்டுகள் இன்று வெளியிடப்படும் என்றும், தேர்தல் ஆணையம் அதற்கான ஏற்பாடுகளை முடித்துவிட்டதாகவும் ரத்நாயக்க தெரிவித்தார்.

அரச சொத்துக்களை பயன்படுத்தி ஒரு வேட்பாளரை ஊக்குவிக்கும் வேலைத்திட்டங்களை அவர்கள் இடைநிறுத்தியுள்ளதாகவும், எந்த வேட்பாளராக இருந்தாலும் அவருக்கு எதிராக செயற்படத் தயங்கப்போவதில்லை எனவும் ஆணையாளர் நாயகம தெரிவித்தார்.

ஒரு வேட்பாளர் தனது சொந்த நிதியைப் பயன்படுத்தினாலும், பொதுச் சொத்தை தனது விளம்பரப் பணிகளுக்குப் பயன்படுத்தினாலும், அது நிறுத்தப்படும் என்றும் அவர் எச்சரித்தார்.

இதன்படி, திட்டப்பணிகளின் திறப்பு விழா மற்றும் நிவாரணம் வழங்கும் நிகழ்ச்சிகள் போன்றவை நிறுத்தப்பட்டன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தேர்தலுக்கு அட்டை மற்றும் மரப்பெட்டிகள் இரண்டையும் பயன்படுத்த தேர்தல்

ஆணையம் தயாராகி வருகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் வாக்குச் சீட்டு 2019ஆம் ஆண்டுக்கான வாக்குச் சீட்டைப் போலவே நீளமாக இருப்பதால், தேர்தல் ஆணையம் அதிக அட்டைப் பெட்டிகளை வாங்க வேண்டியுள்ளது என்றார்.

சுயேச்சை வேட்பாளரின் மரணம் குறித்து கருத்து தெரிவித்த ரத்நாயக்க, இது முதல் சம்பவம் அல்ல. 1994 இல்,ஜனாதிபதி வேட்பாளர் காமினி திசாநாயக்க தேர்தலுக்கு முன்னர் கொல்லப்பட்டார், அவருக்குப் பதிலாக அவரது மனைவி போட்டியிட்டார். அதேபோல், வேட்பாளர் குழு யாரையாவது முன்மொழிந்தால், அந்த நபரை மாற்றலாம், என்றார்.

இருப்பினும், வாக்குச் சீட்டு அச்சடிக்க ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளதால், மாற்று வேட்பாளராக இருந்தாலும், வேட்புமனுவை கொடுத்த வேட்பாளர்களின் பெயர் மற்றும் சின்னம் அதில் இருக்கும். இறந்த வேட்பாளர் சார்பாக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவார்.

ஒரு வேட்பாளர் இறந்ததால் எங்களால் 17.1 மில்லியன் வாக்குச் சீட்டுகளை மீள அச்சிட

முடியாது என்றும் தேர்தல் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.



# இலங்கை வருவாரா எலோன் மஸ்க்?

தேர்தல் பரப்புரைகளில் மக்கள் அபிப்பிராயம் தம்பக்கம் இருப்பதாக காட்டுவதற்கு பல்வேறு திட்டங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதில் முக்கியமாக உலகப் புகழ்வாய்ந்த டெஸ்லா நிறுவனத்தின் நிறுவனரான பிரபல வர்த்தகரான எலோன் மஸ்க்கை இலங்கைக்கு வரவழைத்து அதன் மூலமாகவும் பாரிய பரப்புரைகளை மேற்கொண்டு ஜனாதிபதித் தேர்தலில் தமக்கு சாதகமான நிலையை ஏற்படுத்த ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து மக்களுக்கு பல்வேறு நலத் திட்டங்களை அரசாங்கம் முன்னெடுக்கின்றது. இவற்றில் பெரும்பாலானவை தேர்தல் விதிமுறைகளை மீறிய செயல்பாடுகள் என்று முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இருந்தபோதிலும் அவற்றை தொடர்ந்து முன்னெடுப்பு வரும் ஜனாதிபதி, தேர்தல் காலத்தில் தேர்தல் விதிமுறைகளை மீறி சில நியமனங்களையும் வழங்கினார்.

தற்போது, டெஸ்லா நிறுவனத்தின் நிறுவனரான பிரபல வர்த்தகரான எலோன் மஸ்க்கை இலங்கைக்கு அழைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ஜனாதிபதித் தேர்தலுக்கு ஒரு வாரத்திற்கு முன்னர், எதிர்வரும் 15ஆம் திகதி எலோன் மஸ்க்கை இலங்கைக்கு அழைத்து வருவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக கொழும்பில் அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

எலோன் மஸ்கின் 'ஸ்டார் லிங்' இலங்கையில் தமது இணையச் சேவையைச் செயல்படுவதற்கு ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. இதனை அடிப்படையாக வைத்து அவரை அழைப்பதற்கான திட்டத்தை ஜனாதிபதி தரப்பு தயாரித்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

# மகாஜனா மாணவன் தங்கம் வென்றார்



*சிதம்பரா கணிதப் புதிர்ப் போட்டியில் யாழ்ப்பாணம், தெல்லிப்பளை மகாஜனா கல்லூரி மாணவன் ரங்கதாஸ் பவினேஸ் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்று தங்கப் பதக்கத்தை வென்றார்.*

*ரங்கதாஸ்பவினேஸ் சிதம்பரா கணிதப்புதிர்ப் போட்டியில் அகில இலங்கை ரீதியாக முதலிடம் பெற்றதால் லண்டனில் நடைபெறவுள்ள பரிசளிப்பு விழாவில் கலந்து கொள்ளும் வாய்ப்பினையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.*






# கொரோனா போல குரங்கம்மையும் உலகத்தையே முடக்கிப் போடுமா?

உலக சுகாதார நிறுவனம் (WHO) இரண்டு ஆண்டுகளில் இரண்டாவது முறையாக குரங்கம்மையை (mpox) உலகளாவிய சுகாதார அவசர நிலையாக அறிவித்த போது, பலரின் மனதில் எழுந்த கேள்வி, இது புதிய கோவிட்-19 தொற்றா? என்பதுதான்.

விஞ்ஞானிகளும் சுகாதார நிபுணர்களும் கோவிட் சூழலோடு குரங்கம்மையை ஒப்பிட்டு கவலைப்படுவது சரிதான் என்கிறார்கள். அதே சமயம் கோவிட்-19 மற்றும் குரங்கம்மை ஆகியஇரண்டும் ஒன்று கிடையாது என்கின்றனர்.

“எம்பாக்ஸ் தொற்றை ஹபுதிய கோவிட்’ என்று சொல்வது சரி அல்ல. கோவிட்டை ஒப்பிடும் போது இதில் பொது மக்களுக்கான ஆபத்து குறைவு” என்று ஐரோப்பாவுக்கான உலக சுகாதார நிறுவனத்தின் பிராந்திய இயக்குனர் டாக்டர் ஹான்ஸ் க்ளுாக் கூறுகிறார்.




“எம்பாக்ஸை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பது எங்களுக்குத் தெரியும்.




ஐரோப்பாவில், அதன் பரவலை தடுக்க தேவையான நடவடிக்கைகளை நாங்கள் அறிவோம்.”

கோவிட் , குரங்கம்மை இடையிலான ஐந்து வேறுபாடுகளை விரிவாகப் பார்க்கலாம்.

டென்மார்க்கில் பிடிக்கப்பட்ட குரங்குகளில் இந்த வைரஸ் முதன்முதலில் கண்டறியப்பட்டது. 1958 ஆம் ஆண்டு இது கண்டறியப்பட்ட போது இதனை குரங்கம்மை என்று அழைத்தனர். தற்போது எம்பாக்ஸ் என்று அழைக்கப்படுகிறது.

காங்கோ ஜனநாயகக் குடியரசு நாட்டில் 1970 ஆம் ஆண்டு முதன்முதலில் ஒருவருக்கு எம்பாக்ஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது. அதன் பின்னர் மேற்கு மற்றும் மத்திய ஆப்பிரிக்காவில் தொற்று பரவியது. 2022 ஆம் ஆண்டில் இது உலகளாவிய சுகாதார அவசரநிலையாக அறிவிக்கப்பட்டது, அதன்பிறகு இந்த நோய் 70க்கும் மேற்பட்ட நாடுகளில் பரவியது.

இதற்கு நேர்மாறாக, சீனாவின் வுஹானில் 2019 ஆம் ஆண்டு பரவிய கோவிட் -19, மிக விரைவில் உலகளாவிய தொற்றுநோயாக மாறியது, இது ஒரு புதிய வகை வைரஸால் ஏற்பட்டது. ஹஹளுயுசுளு-ஊழஏ2” - இதற்கு முன்னர் இந்த நோய் தொற்று மனிதர்களுக்கு மத்தியில் கண்டறியப்படவில்லை.

சர்வதேச அளவில் பொது சுகாதார அவசர நிலை அறிவிக்கப்பட்ட போது கோவிட்-19 பற்றி நாம் அவ்வளவாக அறிந்திருக்கவில்லை. ஆனால் எம்பாக்ஸ் பற்றி தற்போது எங்களுக்கு அதிகம் தெரியும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

எம்பாக்ஸ் பாதிக் கப்பட்ட நபருடன் மிக நெருக்கமான அல்லது நீடித்த தொடர்பினால் பரவுகிறது, அதாவது உடலுறவு, அசுத்தமான படுக்கை மற்றும் ஆடைகளுடன் தொடர்பு, மற்றும் நீண்ட நேரமாக நேருக்கு நேர் தொடர்பு ஆகியவற்றின் மூலம் பரவுகிறது.

உலக சுகாதார அமைப்பின் கூற்றுப்படி, டிசம்பர் 2019 மற்றும் ஆகஸ்ட் 2023 க்கு இடையில் உலகளவில் 76 கோடிக்கும் அதிகமான கோவிட்-19 பாதிப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதேசமயம் உலகளவில் எம்பாக்ஸ் நோய்த்தொற்றுகள் 1,00,000 ஐ எட்டுவதற்கு மே 2022 முதல் இரண்டு ஆண்டுகள் ஆனது.

2024 ஆம் ஆண்டில், ஆப்பிரிக்கா நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்களில் (ஆப்பிரிக்கா ஊனுஊ) 18,910 நோயாளிகள் மற்றும் கிட்டத்தட்ட 600 இறப்புகள் பதிவாகியுள்ளன. தாரம்,

கோவிட்-19 தொற்றுநோயின் தொடக்கத்தில் தடுப்பூசிகளை உருவாக்க பெரும் போட்டி நிலவியது. ஆனால் எம்பாக்ஸ/க்கு எதிரான பாதுகாப்பை வழங்கும் தடுப்பூசிகள் இப்போது கிடைக்கின்றன. எம்பாக்ஸ் பெரியம்மை நோயுடன் தொடர்புடையது. பெரியம்மை என்பது 1980இல் தடுப்பூசி மூலம் உலகம் முழுவதும் ஒழிக்கப்பட்ட நோயாகும்.

பெரியம்மைக்கு எதிராக செயல்பட்ட தடுப்பூசிகள் குரங்கம்மைக்கு எதிரான பாதுகாப்பையும் அளித்தன. குறிப்பாக 2022இல் நோய் தொற்று பரவிய போது, பெரியம்மை தடுப்பூசி போடப்பட்டது.

“இது 100% பாதுகாப்பானது அல்ல, ஆனால் 2022 முதல் ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவில் ஏற்பட்ட பெரிய பரவலின் அடிப்படையில், வயதானவர்களுக்கு தற்காப்பு தருகிறது. பெரியம்மை தடுப்பூசியால் அவர்கள் குரங்கம்மை பரவாமல் தடுப்பதற்கு, ஓரளவு பாதுகாப்பை பெறுகின்றனர்.” என்று பேராசிரியர் ஆடம் கூறுகிறார்.

கோவிட் தொற்றுநோயின் போது நாம் பார்த்தது போல, எம்பாக்ஸ் பரவல் பொது ஊரடங்கு சூழலை உருவாக்கும், உலகத்தை ஸ்தம்பிக்க வைக்கும் என்று பலர் கவலைப்படுகிறார்கள்.

ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்த நோய் ஆப்பிரிக்காவின் 16 நாடுகளில் பரவியிருந்தாலும் எந்த எல்லைகளையும் மூட பரிந்துரைக்கப்படவில்லை.

“ஆப்ரிக்காவின் நோய் பரவலை கட்டுப்படுத்துதல் மற்றும் தடுப்பு மைய சிடிசி ஆய்வுகளின்படி எம்பாக்ஸ் மக்கள் மற்றும் பொருட்களின் இயக்கத்திற்கு இடையூறு விளைவிக்காது” என்று ஏஜென்சியின் தலைமை இயக்குநர் டாக்டர் ஜீன் கசேயா கூறினார்.

பாதிக்கப்பட்ட நபர்கள், பொருட்கள் அல்லது விலங்குகளுடன் நெருங்கிய தொடர்பைத் தவிர்ப்பதன் மூலம் தொற்றுநோயிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளலாம். புண்கள் மற்றும் காயங்களைத் தொட்ட பிறகு, கைகளைக் கழுவுதல் அல்லது சானிட்டைசர்களை பயன்படுத்துவது குறித்தும் அறிவுறுத்தப்படுகிறது.

“தடுப்பூசிகள் மிகவும் பாதுகாப்பானவை என்பதை நாங்கள் அறிவோம், எனவே தற்போது எங்களிடம் சிறந்த நோய் தடுப்பு கருவிகள் உள்ளன” என்கிறார். “எனவே, கோவிட் போன்ற ஒரு தொற்றுநோய் சூழல் ஏற்பட இம்முறை சாத்தியமில்லை என்று நான் நினைக்கிறேன்.” என்கிறார் பேராசிரியர் ரோட்னி.

# ‘அரசியலில் புதிய மாற்றம் ஒன்றை எதிர்பார்க்கிறோம்’



## வவுனியா கூட்டத்தில் சிவசக்தி ஆனந்தன்

ஒரு புதிய அரசியல் மாற்றத்தை எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ள முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், இந்தத் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரான அரியநேத்திரனுக்கு வடக்குக் கிழக்கில் உள்ள 12 இலட்சம் வாக்குகளில் 50 வீதமான வாக்குகள் கிடைக்கும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் உள்ள விருந்தினர் விடுதியில் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவான பிரச்சாரத்தைத் திட்டமிடும் கூட்டம் ஒன்று இடம்பெற்றது. இதில் பல பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் கட்சி சார் அரசியல்வாதிகளும் அரசியல் செயற்பாட்டாளர்களும் பங்கு பற்றினார்கள்.

சிவசக்தி ஆனந்தனின் தலைமையில் இடம்பெற்ற இச்சந்திப்பின் போது, பிரச்சாரப் பணிகளை முன்னெடுப்பது தொடர்பாகவும் ஒரு பெரும் கூட்டத்தை ஒழுங்குபடுத்துவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

நாளை செவ்வாய்க்கிழமை வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் இருந்து பிரச்சாரப் பணிகளை தீவிரமாக முன்னெடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சிவசக்தி ஆனந்தன், கடந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக தென்னிலங்கையைச் சேர்ந்த வேட்பாளர்களுக்கு வாக்களித்திருக்கிறார்கள். தமிழ் மக்கள் காட்டிய அந்த நல்லிணக்க செய்தியை ஆட்சியில் இருந்த எந்த ஜனாதிபதிகளும் தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வையோ அல்லது போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அடிப்படை பிரச்சனையையோ இதுவரை காலமும் தீர்க்கவில்லை.

ஆகவே அந்த அடிப்படையிலே நாங்கள் ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தியுள்ளோம். வடக்கு கிழக்கிலே 12 இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் உள்ளார்கள். அதில் 50 வீதத்துக்கு அதிகமான வாக்குகளை பெறுவதற்கான பணிகளை நாங்கள் ஆரம்பித்து இருக்கின்றோம்.

இதுவரை காலமும் தமிழ் மக்களால் தேர்வு செய்யப்பட்ட ஜனாதிபதிகள் தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினையை தீர்க்கவில்லை என்கின்ற ஒரு செய்தியை நாங்கள் சொல்ல முனைகிறோம். இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும் வரைக்கும் தெற்கில் இருக்கின்ற எந்த ஒரு சிங்கள வேட்பாளர்களுக்கும் வாக்களிக்க மாட்டார்கள் என்ற செய்தியையும் கூறுகின்றோம்.

சர்வதேச நாடுகளும் தமிழ் மக்களுடைய பிரச்சினையை தீர்ப்பதற்கு எந்த முயற்சியையும் எடுக்கவில்லை. அரசாங்கமும் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எந்த முயற்சியும் எடுக்கவில்லை. ஆகவே தமிழ் மக்களுக்கு பிரச்சனை இருக்கின்றது. ஒரு புதிய அரசியல் மாற்றத்தை நாங்கள் எதிர்பார்க்கின்றோம்” என்றார்.

# சிங்கள வேட்பாளரை நம்பி தமிழ் வேட்பாளரை புறம்தள்ள முடியாது

## மட்டக்களப்பு முன்னாள் எம்.பி. சிறி நேசன்

“ஒரு சிங்கள வேட்பாளரை நம்பி எங்களால் தமிழ் வேட்பாளரை புறம் தள்ள முடியாது என்ற நிலைப்பாட்டில் மக்கள் உள்ளனர்” என்று தெரிவித்த தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன், “தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் மக்கள் இருப்பதால் மக்களின் பின்னால்தான் தலைவர்கள் நிற்க வேண்டும்” என்றும் வலியுறுத்தினார். ஜனாதிபதி தேர்தல் மட்டும் தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் மட்டக்களப்பில் ஊடகவியலாளர்களுடன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறி நேசன் உரையாடினார். இதன்போது இந்த கருத்துக்களை அவர் முன்வைத்தார்.

“முதல் தடவையாக தமிழ் பொது வேட்பாளர் என்கின்ற சிந்தனையை 83 சிவில் சமூக கட்டமைப்புகள் கொண்டு வந்திருக்கின்றன. அவர்கள் தமிழ் பொது வேட்பாளரை களத்தில் இறக்கி இருப்பதோடு மட்டுமல்லாமல் இதனோடு தமிழ் ஏழு தமிழ்த் தேசிய கட்சிகள் பயணிக்கின்றன” என்றும் அவர் தெரிவித்தார். “இந்த வேளையில் தமிழரசுக் கட்சி இன்னும் தமது முடிவு என்ன என்று சொல்லவில்லை. எனினும் யாரையும் எதிர்க்கின்ற முடிவையும் அவர்கள் எடுக்க க்ஷவில்லை. யாரை ஆதரிக்க வேண்டும் என்பது சம்பந்தமாக முடிவெடுக்கவில்லையே தவிர யாரையும் எதிர்க்கச் சொல்லி அவர்கள் முடிவு சொல்லவில்லை” என்றும் தெரிவித்தார்.



# பாலையடி வாலவிக்னேஸ்வரருக்கு 69 லட்சம் ரூபாவில் புதிய தேர்!



(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப்பிரசித்தி பெற்ற காரைதீவு பாலையடி வால விக்னேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 29ஆம் தேதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

வரலாற்றில் முதல் தடவையாக 69 லட்சஷரூபாவில் பாரிய தேர் ஒன்று ஆலயத்தின் முன்னாள் பிரதம குரு அமரர் சிவஸ்ரீ சண்முரெத்தினம் குருக்கள் குடும்பம் சார்பாக அன்பளிப்பு செய்யப்பட்டிருக்கின்றது .

அமரர் சிவஸ்ரீ சண்முகரெத்தினம் குருக்கள் இவ்வாலயத்தில் பல வருடகாலம் பிரதம குருக்களாக நிறைந்த சேவையாற்றியவர். அவரது சிரேஸ்ட புதல்வர் சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக்குருக்கள் தற்போது இவ் ஆலயத்தின் பிரதம குருவாக இருக்கிறார்.

தேரின் வெள்ளோட்டம் 6 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை இடம்பெறும். மறுநாள் 7 ஆம் தேதி சனிக்கிழமை கன்னித் தேரோட்டம் இடம் பெறும். ஆலய பிரதம குரு சிவ ஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் தலைமையில் இந்த மஹோற்சவம் இடம்பெற இருக்கின்றது. 29ஆம் தேதி வியாழக்கிழமை காலை 7 மணிக்கு காரைதீவு மாவடி ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்திலிருந்து கொடிச்சீலை சம்பிரதாயபூர்வமாககொண்டுவரப்பட்டு கொடியேற்றப்படும்.







## சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகளுக்கு பவள விழா



தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமிகளின் பவளவிழாவும்'அறம் பாலிக்கும் ஞான மோகனம்' என்ற நூல் வெளியீடும் எதிர்வரும் 31 8 2024 சனிக்கிழமை காலை 8:30 மணிக்கு ஓய்வு பெற்ற அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில்வரவேற்பு நடனத்தை பண்டாரவளை மகாவித்தியாலய மாணவிகளும் வரவேற்புரையை ஆசிரியர் க.கைலை நாதனும் ஆசியுரைகளை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் மற்றும் சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் பிரம்மஸ்ரீ ப மனோகர குருக்கள் ஆகியோர் ஆற்றுவர்.

நிகழ்வின் சிறப்புரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் ஆற்றுவார். நிகழ்வில் வெளியிடப்பட உள்ள அறம் பாலிக்கும் ஞான மோகனம் என்ற நூலின் வெளியீட்டுரையை கே எஸ் சிவஞானராசா ஆற்றுவார்.

சந்நிதியான் ஆச்சிரமத்தால் போசிக்கப்படும் நிறுவனங்கள் சார்ந்து மாவட்ட ரீதியான பிரதிநிதிகள் வாழ்த்துரைகள் வழங்குவர். ஆசிரியை சசி ரேகா ஜெயராசன் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை சார்பில் வாழ்த்து பா வழங்குவார்.

## திருப் பழுகாமம் கேதீஸ்வரர் நாதர் கும்பாபிஷேகம்

திருப்பழுகாமம் ஸ்ரீ கௌரி அம்பிகா சமேத கேதீஸ்வர நாதர் (சிவன்) ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன பக்ஷ மஹா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 30 ஆம் தேதி வெள்ளிக்கிழமை நடைபெற இருக்கின்றது.

அதற்கான கருமாரம்பம் 28ஆம் தேதி இடம்பெற்று 29ஆம் தேதி எண்ணைய்க் காப்பு சாத்தும் நிகழ்வும் இடம்பெற இருக்கின்றது.

பிரதிஷ்ட்டா பிரதம குரு சிவஸ்ரீ கேதீஸ்வர பவித்திர குருக்கள் தலைமையில் இந்த நிகழ்வுகள் இடம் பெற இருக்கின்றது.

தொடர்ந்து 11 நாட்கள் மண்டலாபிஷேக பூசைகள் அடுத்து 12செப்டம்பர் மாதம் 1008 சங்குகளால் சங்காபிஷேகம் நடைபெறும்.

அன்று கும்பாபிஷேக மலர் வெளியிடும் அன்னதானமும் வழங்கப்படும் என்று ஆலய பிரமுகர் எஸ் செல்வநாயகம் (இகிமி) தெரிவித்தார்.






## கல்முனை மாநகர சபை ஆணையாளர் நௌபீஸ் ஜப்பான் பயணமானார்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கிழக்கு மாகாண சபையின் முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சிப் பிரிவு பணிப்பாளரும்கல்முனை மாநகர ஆணையாளருமான என்.எம். நௌபீஸ் அவர்கள் விசேட புலமைப்பரிசில் பெற்று இன்று திங்கட்கிழமை ஜப்பான் பயணமானார்.

ஜப்பானில் ஒரு மாத காலம் இடம்பெறவுள்ள உள்ளூர் தொழில்துறை மேம்பாடு குறித்த அறிவுப் பகிர்வு பயிற்சித் திட்டத்தில் பங்குபற்றுவதற்காகவே அவர் அங்கு செல்கிறார்.

ஜப்பானிய அரசாங்கத்தினால் நடாத்தப்படுகின்ற இப்பயிற்சித் திட்டத்தில் பங்குபற்றுவதற்கான புலமைப்பரிசில் அனுசரணையை துஜஊயு எனும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் வழங்கியுள்ளது.

இப்பயிற்சியில் பங்குபற்றுவதற்காக ஜப்பான் நாட்டு அதிகாரிகளுக்கு மேலதிகமாக 06 நாடுகளில் இருந்து தலா ஒருவர் வீதம் 06 அதிகாரிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதன் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி கிழக்கு மாகாண சபையின் முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சிப் பிரிவு பணிப்பாளரும் கல்முனை மாநகர ஆணையாளருமான என். எம். நௌபீஸ் மாத்திரமே தெரிவு செய்யப்பட்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமதுமாநகரஆணையாளரானஎன். எம். நௌபீஸ்இத்தகைய உயர்தரமான உன்னத வாய்ப்பைப் பெற்று ஜப்பான் செல்வதை முன்னிட்டு கல்முனை மாநகர சபை உத்தியோகத்தர்கள் கடந்த வெள்ளிக்கிழமையன்று ஆணையாளரை வாழ்த்தி வழியனுப்பி வைத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## பருத்தித்துறையில் தமிழக மீனவர்கள் 11 பேர் பிடிபட்டனர

தமிழகத்தின் நாகை மீன்பிடித்துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்க புறப்பட்ட ஒரு மீன்பிடி விசைப்படகையும் அதிலிருந்த 11 மீனவர்களையும் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கடற்படையினர் பருத்தித்துறை வடகிழக்கு கடல் பகுதியில் வைத்து கைது செய்துள்ளனர்.

வெள்ளிக்கிழமை இரவு கைதுசெய்யப்பட்ட இவர்களை காங்கேசன்துறை

கடற்படை முகாமிற்கு அழைத்துச் சென்றனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களிடம் கடற்படையினர் முதல் கட்ட விசாரணை செய்த பின் மீனவர்கள் அனைவரும் யாழ்ப்பாணம்நீரியல்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD
PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக
உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
jride
JRide - Beyond the Road
JRide Driver: Drive & Deliver
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை
பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க
ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver
செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து
உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD
DRIVER APP:
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
Google Play
App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே
புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து
வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp
மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!